**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 180/2022</u>**

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரியதர்ஷினி | வயது | 19 |
| த . பெ . (அ)க . பெ . | பொன்னுசாமி | தொழில் | தனியார் கம்பெனி |
| ஊர்/பணிபுரியுமிடம் | கல்லாவூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> 1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் கல்லாவூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு முடித்துவிட்டு தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் எங்களுடைய பக்கத்து நிலத்துக்காரர்கள். அ.சா.1 கன்னிகா எனது அம்மா. என் அம்மா எதிரி ராஜேந்திரனிடம் ருபாய் இரண்டு லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு எங்களுக்கு சொந்தமான ஒரு பகுதி நிலத்தை ராஜேந்திரனுக்கு எதிரடி கிரையமாக கொடுத்திருந்தார். பின்னர் மேற்படி இரண்டு லட்சமும், கூடுதலாக வட்டி முன்று லட்சம் என ஆக மொத்தம் ஐந்து லட்சம் பணத்தை செலுத்திவிட்டு சொத்தை என் அம்மா திரும்ப கேட்டார். ஆனால் அவர் அதனை கொடுக்க மறுத்து வந்திருந்ததால் எங்கள் குடும்பத்தினருக்கிடையே முன்விரோதம் இருந்து வந்தது.

(2) இந்நிலையில் 24.12.2021 அன்று மாலை 6.00 மணிக்கு நானும் என் அம்மாவும் எங்கள் வீட்டிற்கு பக்கத்திலிருந்த நிலத்தில் செடி வெட்டிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு எதிரி ராஜேந்திரன் வந்தார். தேவிடியா, பொறிக்கி, உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று அசிங்க அசிங்கமாக திட்டினார். அப்போது எதிரி ராஜேந்திரன் கையில் கத்தி வைத்திருந்தார். என் அம்மாவை ராஜேந்திரன் மேற்படி திட்டிக்கொண்டே அந்த கத்தியால் இடது பக்க தலையில் வெட்டிவிட்டார். அப்போது என் அம்மா தடுக்க முற்பட்ட போது அவருடைய இடது கையிலும் வெட்டுப்பட்டுவிட்டது. அப்போது ராஜேந்திரன் அவருடைய மகன் 2 ம் எதிரி வெங்கடேசனை போன் செய்து

வரவழைத்தார். அப்போது 2ம் எதிரி வெங்கடேசன் விறகு கட்டை எடுத்து வந்து என்னையும் என் அம்மாவையும் சராமாரியாக அடித்தார். பிறகு அண்ணன் குழந்தை கோபிகாவை எதிரி ராஜேந்திரன் மேற்படி வெங்கடேசன் கொண்டு வந்த விறகு கட்டையால் அடித்தார்.அதில் மேற்படி குழந்தைக்கும் தலையில் கீறல் ஏற்பட்டது.

(3) மேற்படி எதிரிகள் இருவரும் எங்களை அடித்ததை அங்கு பக்கத்தில் இருந்த நிலத்துக்காரர்களான குப்புசாமி, சரிதா ஆகியோர் வந்து தடுத்து நிறுத்தினார்கள். பின்னர் நாங்கள் ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரவழைத்து திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு சென்று அட்மிட் ஆனோம். அப்போது போலீஸார் என் அம்மாவிடம் புகார் பெற்றார்கள். அங்கு என்னையும் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசரணை=</u>

(1) சம்பவத்தின் போது அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் நானும், என் அம்மா மற்றும் அண்ணன் குழந்தைகள் கோகுல், கோபிகாவும் இருந்தார்கள். 13.05.2016 அன்று எதிரி ராஜேந்திரனுக்கு நிலத்தை கிரையம் கொடுத்தது உண்மை என்றால் சரிதான். நாங்கள் எதிரியிடம் நான் கூறுவது போல் பணம் ருபாய் ஐந்து லட்சத்தை திரும்ப கொடுத்துவிட்டோம் என்றோ அந்த கிரையம் எதிர்நிலை கிரையம் என்றோ ஆவணம் ஏதேனும் போலீஸாரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை.எதிரிக்கும் எங்களுக்கும் வாய்பேச்சு – பேச்சுவார்த்தை 3 நிமிடம் நடந்திருக்கும். ராஜேந்திரன் வரும்போது கத்தியால் செடியை வெட்டிக்கொண்டிருந்தோம் என்றால் என் அம்மா மட்டும்தான் வெட்டிக்கொண்டிருந்தார். என் அம்மா வெட்டிக்கொண்டிருந்த வெட்டுக்கத்தியை போலீஸாரிடம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அதற்கும் கைப்பிடி இருந்தது என்றால் சரிதான். அந்த கத்தி சுமாராக 2–1/2 அடி இருக்கும் என்றால் சரிதான்.

(2) சம்பவம் நடந்து ஒரு மணி நேரம் கழித்து அந்த கத்தியை கொடுத்திருப்போம் என்றால் சரிதான்.எதிரி ராஜேந்திரன் எங்களிடம் வந்த போது கருங்கல் எடுத்து வந்திருந்தார். வந்தவுடன் அந்த கல்லால் எங்களை அடித்துவிட்டார் என்றால் சரிதான். அந்த கல்லையும் போலீஸாரிடம் கொடுத்தோம் என்றால் சரிதான். பின்னர் என் அம்மா செடி வெட்டிக்கொண்டிருந்த கத்தி கீழே விழுந்துவிட்டது. அதை எடுத்துதான் ராஜேந்திரன் எங்களை தாக்கினார். மேற்படி ராஜேந்திரன் விறகுகட்டையால் அடித்தார் என்றால் சரிதான். மேற்படி விறகு கட்டையால் 5 நிமிடம் கழித்து அடித்தார். என் அம்மாவை வெட்டிய பின்பு 5 நிமிடம் கழித்து

வெங்கடேசனை போன் செய்து வரச்சொன்னார். அப்போது வெங்கடேசனும் ஒரு விறகுகட்டையை எடுத்துவந்தாரா என்றால் ஆமாம். இருவரும் ஆளுக்கொரு விறகு கட்டையால் எங்களை அடித்தார்கள் என்று சொல்கிறேனா என்றால் ஆமாம்.

(3) குழந்தை கோபிகாவையும் ராஜேந்திரன் விறகு கட்டையால் அடித்தார். குப்புசாமி, சரிதா ஆகியோர் வந்து எதிரிகளை விலக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் மேற்படி கூறிய சங்கதிகளை தான் போலீஸாரிடம் கூறியிருந்தேன் என்றால் சரிதான். நானும் என் அம்மாவும் இதுசம்மந்தமாக காவல் நிலையம் சென்றிருந்தோம் என்றால் சரிதான். அங்கு போலீஸார் என்னிடம் வாக்குமுலம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். என் அம்மாவை திட்டியதா சொல்லும் வார்த்தைகளையும் போலீஸாரிடம் கூறியிருந்தேன் என்றால் சரிதான். கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியது யார் என்றால் இரண்டு எதிரிகளும் கூறினார்.அவர்கள் எங்களை அடித்துவிட்டு செல்லும் போது கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார்கள்.

(4) எதிரிகளும் சம்பவத்தினத்தன்று புதுார் நாடு ஆரம்ப சுகாதாரநிலையத்திற்கு சிகிச்சைக்கு சென்றார்கள் என்று என் அம்மா கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் அதை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நாங்கள் தான் 1ம் எதிரி ராஜேந்திரன் மீது மிளகாய்பொடி துாவி கல்லால் குத்தினோம் என்றாலும் அதனால் தான் அவர் மருத்துவமனைக்கு சென்று அட்மிட் ஆனார் என்றாலும் சரியல்ல. என் அம்மா திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு தனியார் வாகனத்தில் வந்ததாகவும், 1ம் எதிரி புதுார் நாடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆம்புலன்ஸில் சென்றதாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் மீது தனியாக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு சொல்லியுள்ளார்கள்.

(5) நாங்கள் தனியாகவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த தனியாக கொடுத்த புகார் வாக்குமுலம் தான் இந்த நீதிமன்றத்தில் இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் சொத்தை மறுபயனுடன் கிரையம் செய்துகொடுத்துவிட்டு தற்போது அவரிடமிருந்து நிலத்தை பெற்றுக்கொள்வதற்காக பிரச்சனை செய்து கொண்டு அதன்படி அவர் மீது மிளகாய்பொடி துாவி அவரை கல்லால் குத்திவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் கூறியது போல் கல்லாலோ, கத்தியாலோ, விறகுகட்டையாலோ தாக்கவில்லை என்றாலும் அதன்படி நாங்கள் போலீஸாரிடம் எந்த

வாக்குமுலமும் கொடுக்கவில்லை என்றாலும், மேற்படி வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக வேண்டி இந்த புகாரை பொய்யான சங்கதிகள் அடிப்படையில் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை= இல்லை